# காஞ்சிப் பெரியவர்கள்
# அருளுரைகள்







# ஞான தீபம்

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை**

பிரதியொரு மனிதனும், இந்த உலகத்தில் எவ்வித துக்கமுமில்லாமல், எவ்வித கஷ்டங்களையும் அனுபவிக்காமல் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறான். அது மட்டுமன்று, பரிபூரண சந்தோஷத்தை அதாவது துக்கக் கலப்பிடமில்லாத சாசுவதமாக இருக்கக்கூடிய சந்தோஷத்தை - சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்றும் விரும்புகிறான். இங்ஙனம் துக்கத்தினால் கறைபடாமல் எப்பொழுதும் பூரணமாயுள்ள சந்தோஷத்தை ஆனந்தம் என்று அழைப்பர். இந்த ஆனந்தத்தை அனுபவிப்பது நமது பிறப்புரிமை.

நாம் ஒவ்வொருரிடத்திலும் ஆத்மா என்பதொன்று இருக்கிறது. அதுதான். அநியாயமான சரீரத்திற்குள் சரீரியாக இருந்து கொண்டு நம்மை இயங்க வைக்கிறது. ஆனால் இங்கு ஆனந்தம் அடர்ந்த ஓர் இருளில் மறைந்திருக்கிறது.

இந்த உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற நாம் எத்தனையோ காரியங்களைச் செய்து கொண்டு வர வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உலக வாழ்க்கையின் பெரும்பகுதி துக்கமயமாகவே இருக்கிறது. இருந்தாலும், இந்த வாழ்க்கையின் மத்தியில், அவ்வப்பொழுது மேற்படி ஆனந்தத்தின் சிறுசிறு துளிகளை நாடிச் செல்கிறோம்.

இருள் அகன்றுவிட்டால், அந்த இருட்டினால் ஏற்பட்ட கஷ்டங்களும் அகன்று போகும். அப்படி அகன்று போவதற்கு வெளிச்சம் தேவை. ஒரு விளக்கை ஏற்றி வைத்த மாத்திரத்தில், இருள் தானாகவே அகன்று விடுகிறது.

சம்சாரமென்றும் அந்தகாரச் சூழலில் சிக்கிக் கொண்டிருக்கிற நமக்கு வெளிச்சத்தை - விளக்கை - அருளக் கூடியவன் ஒருவன் இருக்கிறான். அவன்தான் சர்வேசுவரன். உலகம் யாவையும் தாமுள வாக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகிலா விளையாட்டுடையவன் அந்த சர்வேசுவரன். அவன் சர்வக்ஞன்;

சகல சக்திகளுடையவன். ஆத்ம சாட்சாத்காரத்தின் மூலம் அவனைக் கண்டறிந்த மகரிஷிகளென்ன, பக்தர்களென்ன! இப்படிப் பலரும் ஒன்றிய மனதுடனும் தங்கள் ஆவி உடமையெல்லாமும் அவனிடத்தில் ஒப்பு கொடுத்துவிட்ட மனப்பான்மையுடனும் அவனை - அந்த சர்வேசுவரனை வழிபட்டு வந்திருக்கின்றனர். அப்படி வழிபட்டு வருவதுதான் அவர்களின் வாழ்க்கையின் லட்சியமாக இருந்து வந்திருக்கிறது. அவர்கள் அவனைப் பற்றியே சதா சிந்தித்து வந்தார்கள்; வேத சாஸ்திரங்களின் பிரமாணப் பிரகாரம் அவனைப் பற்றியே பேசி வந்தார்கள்; தங்கள் வாழ்க்கை முழுவதையும், அவனிடத்தில் திடபக்தி கொண்டவர்களாக கழித்து வந்தார்கள். இப்படி அந்த சர்வேசுவரனை வழிபட்டு வந்ததன் மூலம், தங்களுக்குத் தேவைப்பட்ட ஆத்மிகச் செல்வம் அனைத்தையும் பெற்றுவிட்டதாக உணர்ந்து, லௌகிக சுகங்களில் பற்றில்லாதவர்களாய், ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள். இதைக் கீதையில், பகவான் பின்வருமாறு வலியுறுத்துகிறார்கள்.

நான் அனைத்திற்கும் பிறப்பிடம். யாவும் என்னிடத்திலிருந்தே விரிகின்றன. இதையறியும் ஞானிகள் என்னை அன்புடன் வாழ்த்துகின்றனர்.

சித்தத்தை என்பால் வைத்து, உயிரை எனக்குரியதாக்கி ஒருவருக்கொருவர் என்னை விளக்கிக் கொண்டு என்னைப் புகழ்ந்து பேசியும், மனநிறைவடைந்தும் மகிழ்வடைந்தும் இருக்கின்றனர்.

இங்ஙனம் பக்தி செலுத்தியவர்களிடத்தில் பகவான் அதிகப் பிரீதியடைந்தவராய், அவர்கள் மீது தமது கருணையை மழையாகப் பொழிகிறார்; அவர்களிடத்தில் அதிகமாக ஈடுபட்டு, அவர்கள் தம்மிடத்தில் எந்த அளவுக்கு பிரீதியாய் உள்ளார்களோ, அந்தளவுக்குஅவர்களுக்கு அனுக்கிரகம் செய்கிறார். பகவான் கீதையில் கூறுகிறார் :

யார் என்னை எப்படி வழிபடுகிறாரோ அவருக்கு நான் அப்படியே அருள் புரிகிறேன். பகவான், தம்மிடத்தில் அசஞ்சலமான பக்தி கொண்டவர்களுக்குத் தம்மை வந்தடையும் ஞான பரிபக்குவத்தை அளிக்கிறார்.



யாரொருவர், தம்மிடத்தில் (அதாவது பகவானிடத்தில்) பரம பக்தி கொண்டு, அவரது நினைவாகவே இருக்கிறாரோ அவருக்கு - அந்த பரம பக்தருக்கு அவரையறியாமலே பரப்ரஹ்மமும் தாமும் ஒன்று என்ற அனுபவ அறிவு உண்டாகும்படி பகவான் அருள்கிறார். அதாவது அஹப்ரஹ் மாஸ்மி - நானே ப்ரஹ்மமாயிருக்கிறேன் - என்ற இரண்டறக் கலந்திருப்பதற்கான அனுபவம் அந்த பக்தருக்கு ஏற்படுகிறது.

ஞானத்தை வெளிச்சத்திற்கும் அஞ்ஞானத்தை இருட்டுக்கும் ஒப்பிட்டுச் சொல்வது வழக்கம். பகவான் இப்படியே கீதையில் சொல்கிறார்.

நான் அவருக்கு அருளால் இறங்கி அந்தக்காரணத்தில் வீற்றிருந்து மெய்ஞ்ஞானச் சுடர் விளக்கால் அஞ்ஞானத்து உதித்த ஆரிருளை அகற்றி விடுகிறேன். (அத். 10. சுலோ. 11)

ஒரு விளக்கை எரிய வைக்க எண்ணெய் தேவையாயிருக்கிறது. அந்த எண்ணெய் கொள்வதற்கு ஒரு பாத்திரமும் அந்த எண்ணெயில் தோய்ந்த திரியும் அவசியம். திரியை ஏற்றியதும் லேசான காற்று இருக்கும் பட்சத்தில் விளக்கு அணையாமல் எரிந்து கொண்டிருக்கும். அந்த விளக்கின் பிரகாசத்தில், எப்படிப்பட்ட மையிருட்டும் நமது முயற்சி இல்லாமல் தானாகவே அகன்றுவிடும்.

ஞானதீபம் என்பது, அஹம் ப்ரஹ்மாஸ்மி என்பது போன்ற மகாவாக்கியங்களினால் அறிவிக்கப்பட்ட அந்தக் கரணத்தின் பரிணாமமேயாகும். பிரஹ்மச்ரியத்தை அனுஷ்டித்தல் முதலிய கடமைகளைச் செய்து கொண்டு வருவதனால் பரிசுத்தமடைந்த மெய்யறிவுதான் மேற்படி தீபத்திற்குத் திரி. பகவானிடத்தில் பக்தி செலுத்தி அது காரணமாக அவனது அருளைப் பெறுவதுதான் மேற்படித் தீபத்திற்கு எண்ணெய். இந்த எண்ணெயில் மெய்யறிவு என்ற திரி நனைக்கப்பட்டிருக்கிறது. பகவானிடத்தில் மனத்தை ஒரு முகப்படுத்திச் செலுத்துவதுதான் மேற்படி ஞானதீபத்தை அணையாமல் ஒளி விட்டுப் பிரகாசிக்கச் செய்யவல்ல மெல்லிய பூங்காற்று. வைராக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகவுள்ள அந்தக்கரணமே எண்ணெய்ப் பாத்திரம். பேராசையும் துவேஷமுமில்லாத மனம்தான் திறந்தவெளி. இந்த வெளியில் பலத்த காற்று வீசுவதில்லை. பகவான் அஞ்ஞானமான இருட்டைப்

போக்கி ஞானமான தீபத்தை அணையவிடாமல் பாதுகாக்கிறார். அந்தப் பாதுகாப்பின் விளைவாக ஆத்மாவைப் பற்றி ஏற்படுகின்ற தப்பபிப்ராயங்கள் எல்லாம் அழிந்து ஒழிந்துவிடுகின்றன. அந்த நிலையில் பக்தன் செய்வதற்கொன்றுமில்லை. ஆனந்தமயமான ஜோதி ஸ்வரூபத்தில், அதாவது ப்ரஹ்மத்தினிடத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு விடுகிறான்.

ஒரு தீபமானது, ஒரே சமயத்தில், ஒன்று ஓரிடத்தில் சூழ்ந்து கொண்டிருக்கிற இருட்டைப் போக்குவது, மற்றொன்று அதுகாறும் அந்த இருட்டில் மறைந்து கிடந்த பொருள்களைத் தெரியும்படி செய்வது ஆகிய இரண்டு காரியங்களைச் செய்கிறது. தீபவெளிச்சத்தில் புதியதொரு பொருள் நம் பார்வைக்குத் தென்படுகிறது. தீபத்தை ஏற்றுவதைத் தவிர நாம் வேறொரு காரியத்தையும் செய்ய வேண்டியதில்லை. அதுவரையில் இருட்டில் மறைந்து கிடந்த பொருள்களெல்லாம், தாமாகவே நமக்குத் தெரிய வருகின்றன. அதுபோல, ஞானமானது, ஆனந்தமான ஆத்மாவை மூடிக் கொண்டிருக்கும் அக்ஞானத்தை அகற்றி விடுகிறது. இதிலிருந்து, ஞானதீபத்தின் வெளிச்சத்தில் புதிய பொருள் ஒன்றும் சிருஷ்டியாவதில்லை யென்பது ஏற்கனவே மறைந்து கிடந்த பொருள் தான் வெளிப்படுகிறதென்பது உறுதியாகின்றன. ப்ரஹ்மமே, ஆனந்தமயமானதுதான். நாம் ஒவ்வொருவரும் உண்மையில் பரப்ரஹ்ம ஸ்வரூபபமாகவே இருக்கிறோம். ஜீவாத்மா, ப்ரஹ்மமாக இருக்கிறதென்று சாஸ்திரங்கள் முழங்குகின்றன. இந்த ஜீவ-ப்ரஹ்ம ஐக்கியத்தை ப்ரம்மானுபவம் என்று அழைப்பர்.

மாயையானது மிகவும் சக்தி வாய்ந்தது. அந்த சக்தியானது நமது சுயத்தன்மையை அறிந்து கொள்ளாமற் போய்விடுகிறது. அப்படி அறிந்து கொள்ளமலிருப்பதுதான் அஞ்ஞானம்: இருட்டு. அந்த அஞ்ஞான இருட்டைப் போக்க அதாவது நமது சுயதன்மையை அறிந்து கொள்ள ஞானம் உதவுகிறது. ஆதலின் நாமெல்லாரும் இந்த ஞானதீபத்தை கொண்டிருக்கும் ப்ரஹ்மத்தை நோக்கி தமஸோமா ஜோதி (இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்துக் கொண்டு செல்ல) பிரார்த்தனை செய்வோமாக.



# கர்ம பலன்

## பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

நம்முடைய வாழ்க்கையிலே கஷ்டங்கள், கவலைகள், துன்பங்கள் வந்தால் கடவுளைக் கும்பிட்டால் சரியாகப் போய்விடும் என்று சொல்கிறோம். வாழ்க்கையின் அடிப்படையான தத்துவம் ஸந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான். ஆனால் வாழ்க்கை என்றால் இன்பமும் துன்பமும் கலந்திருந்தால்தான் வாழ்க்கையாகும். பரம்பொருள் ஒன்றுக்குத்தான் இவையெல்லாம் இல்லாது இருக்கும். மனிதப்பிறவியாக இருந்தாலும் சரி, ம்ருகப் பிறவியாக இருந்தாலும் சரி, துன்பத்தைத் தவிர்க்க முடியாது. இதைத் தவிர்க்கக் கூடிய பரமாத்மாவின் அனுக்ரஹம் நமக்கு வந்தால் எதுவும் நம்மை பாதிக்காமல் இருக்கும். உடல் என்பது இருக்கும்வரை நம்மை எல்லாமே பாதிக்கத்தான் செய்யும்.

பஞ்சபூதங்களினால் உண்டாகக் கூடியதற்குக் கவலைகள் துன்பங்கள் இல்லாமல் இருக்க முடியாது. ஸ்வாமிக்கு மேலே பெரிதாக உள்ள பரமாத்மா, பரம்பொருள் ஒன்றுதான். பரம்பொருளின் மூலமாகத் துயர்கள் குறைகின்றன. நம் ஸமயத்தில் சொல்லுவது போல, குறைக்க முடியுமே தவிர, தவிர்க்க முடியாது. வெயிலில் வெளியில் போகும்போது உடம்பு சுடுகிறது. ஆனால், செருப்பு, குடை இவற்றோடு செல்லும்போது வெம்மை நமக்குக் குறைகிறது. அதுபோலத் தான் துயரமும். நமக்கு நல்லது கெட்டது நடக்கிறது என்றால் எல்லாம் நம் விதியால்தான். கர்ம சித்தாந்தத்தின் அடிப்படை என்ன என்றால், ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையிலே எத்தனையோ தவறுகள் செய்கிறான். இவை எல்லாவற்றிற்கும் தண்டனை கிடைக்காமல் இருக்காது. இறைவனை த்யானம் பண்ணினால் ஓரளவு பலன் நமக்குக் கிடைக்கும். எந்த ஒரு நல்லது, கெட்டது பண்ணினாலும் அதற்குத் தக்க பலன் இல்லாமல் போகாது. இதற்கெல்லாம் பின்னால் பலன் கிடைக்கும். இதற்கெல்லாம் ஆகாமி என்று பெயர். ஆகாமி என்றால் பின்னால் வரக்கூடியது என்று பெயர். பிரத்யக்ஷ பலன், ஆகாமி என்று இரண்டு பலன்கள் உள்ளன. ஏழையாக இருந்தாலும் மனஸால் சுத்தமாக இருப்பான். ஆகையால் எந்தவிதமான துன்பமும் வராமல் இருக்கும். நாம் இறந்தால் ஏதாவது ஒரு பிறவி

கிடைக்கும். பிறவியிலே, ஒவ்வொரு கர்மங்களும் சேர்ந்த பெயர்தான் ஆகாமி. கர்மங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு மூட்டையாக ஆகிவிடும். அப்படி மூட்டையாகச் சேர்ந்த பிற்பாடு அதற்குப் பெயர் ஸஞ்சிதமாகும். அந்த ஸங்சிதத்திலே இருந்து அவற்றை அனுசரித்துத்தான் பிறவிகளை இறைவன் நமக்குக் கொடுக்கிறான்.

இந்த மாதிரி இவற்றை எல்லாம் அவரவர் கர்மங்களுக்கு ஏற்றபடி எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கக் கூடிய ஒரே ஒன்று பரம்பொருள்தான். ப்ராப்தம் நமக்கு இருக்கும்போது நமக்கு நல்லது நடக்கிறது. உதாரணமாக ரேஷன் கார்டு முறையைச் சொல்லலாம். தேவையான சாமான்களை அதற்குத் தகுந்தபடி வாங்கிக் கொள்ளலாம். சாமான்கள் அவரவர் குடும்பத்தைப் பொறுத்து வழங்கப்படும். எந்த ஒரு நன்மையோ, தீமையோ, வேகத்தை அனுசரித்துத்தான் பலன் கிடைக்குமே தவிர, மற்றபடி எதுவும் நடக்காது. நம் வினைப்பயன் மூலமாகத் துன்பத்தை அடையக்கூடியதாக இருந்தாலும் கூட சூழ்நிலையில் இன்பமே முன்னால் வரும். எப்படியானாலும் இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும். இதை நினைவுபடுத்தத்தான் கோயில், கடவுள், பக்தி என்று சொல்லப்படுகிறது. இதை வைத்துத்தான் நம் கர்ம ஸித்தாந்தம் வந்தது. கடவுள் வழிபாடு செய்யும்போது துன்பம் குறையுமே தவிர, துன்பம் வராமல் இருக்காது.

நிறைய புண்யம், பாபம் பண்ணும்போது உடனேயே பலன் கிடைக்கிறது. நல்வினை, தீவினை அதிகமாகும்போது பலன் உடனேயே கிடைக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் இன்ப துன்பம் வரக்காரணம் நம்முடைய வினைகள்தான். இறைவன் அருளாலேயும், மனசு பலத்தாலேயும், சூழ்நிலையாலும் இதையெல்லாம் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி நமக்கு உண்டு. கீதையில் அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் உபதேசம் செய்யும் போது "ஏன் அர்ஜுனா அழுகிறாய்? பிறந்தவன் எல்லாம் சாகத்தான் போகின்றான். செத்தவன் எல்லாம் வேறோர் உயிராகப் பிறக்கத்தான் போகிறான். இதுதான் கர்மம். இதனால் அழாதே!" என்று பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கிறார்.

இறைவனிடத்தில் போய் நாம் நமக்கு இதைச் செய். அதைச் செய் என்று சொல்ல வேண்டியதில்லை. தானாகவே எல்லா ஸௌகர்யங்களும் எல்லோருக்கும் கிடைக்கும்.

பரம்பொருளை அனுபவத்தினால் உணர முடியுமே தவிர வேறு எதுவாலும் முடியாது. இதை உணரத்தான் உருவ வழிபாட்டை முக்யமாக வைத்து இருக்கிறார்கள். அறிந்தும் அறியாமலும் செய்த தவறுகளுக்கும் பலன் உண்டு. ஆண்டவன் நம்மைப் படைக்கும்போது நன்றாகத்தான் எல்லாவற்றையும் படைக்கிறான். மனிதன் குயுக்தியில் செயல்படுவதால்தான் இன்ப துன்பங்கள் ஏற்படுகின்றன. ஆகையால் நம்முடைய வாழ்க்கையில் சூழ்நிலை நன்றாக அமைய வேண்டும். நல்ல சிந்தனைகள் உருவாக வேண்டும். சாஸ்த்ரத்தில் சொல்லும் போது ஆண்டவனால்தான் உலகம் உண்டாயிற்று என்று சொல்லப்படுகிறது. பௌத்தமதம் சூன்யத்தில்தான் உலகம் உண்டாயிற்று என்று சொல்கிறது. இவ்வாறு ஒவ்வொரு மதமும் ஒரு மாதிரி சொல்கிறது. துன்பம் போக்க ஒருவழி இறைவழிபாடுத்தான்.

நம் எல்லோரும் நல்வழியை மேற்கொண்டால் வாழ்க்கைக்கு நல்லது. இதை விட்டுவிட்டுத் துன்பம் தரும் வழியில் செல்லக்கூடாது. அப்பர் என்று ஒருவர் இருந்தார். இவரைச் சிலர் கடலில் தூக்கிப் போட்டார்கள். அப்போது அவர் என்வினை என்னைக் காப்பாற்றட்டும் என்றுதான் சொன்னார். ஆகையால் வினை உண்டு என்பதை நாம் நன்றாக உணர முடிகிறது. ஆகையால் தீயவினைகளைக் குறைக்க இறைவழிபாடு முக்கியம். அடித்தளத்திலே இருந்து இந்த நம்பிக்கை வளர வேண்டும். அப்போதுதான் எல்லோரும் ஸௌக்யமாக இருக்க முடியும்.

**கேள்விகளும் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பதில்களும்.**

1. **ஒரு மனிதன் புகழப்படுவது எதனால்?**

   நல்ல குணங்களாலும் - நன்னடத்தையினாலும்.

2. **ஸாமான்ய மனிதன் கவலைப்படுவதற்கும் நல்லோர் கவலைப்படுவதற்கும் வித்தியாசம் என்ன?**

   ஸாமான்ய மனிதன் தனக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று தன் தேவைக்கேற்றவாறு கவலைப்படுவான். நல்லோர்கள் நாட்டுமக்கள் நல்ல குணத்துடனும் நன்னடத்தையுடனும் வாழ வேண்டுமென்று கவலைப் படுவார்கள்.

3. **யாருடைய பொருளானது ப்ரயோஜனத்திற்கு அற்றதாக ஆகிறது?**

கருமியினுடைய பொருள்.

4. **யார் தரித்னாக இருக்கிறான்?**

யார் ஒருவருக்கும், ஒரு பிராணிக்கும் முன்பு சகாயம் செய்யாமல் இருந்தானோ-இப்பொழுது சோம்பேறியாக இருக்கிறானோ அவன் தரித்ரனாக இருக்கிறான்.

5. **படிப்புக்கு இடையூறுகள் என்னென்ன?**

பந்தயம் வைத்து ஆடுதல், சோம்பேறித்தனம், தூக்கம்.

6. **எவனொருவன் எப்பொழுதும் வருத்தப்பட்டுக் கொண்டே இருப்பான்? கவலைப்பட்டுக் கொண்டே இருப்பான்?**

தரித்ரனாயுள்ளவன், வியாதியுள்ளவன், பிறர்பொருளை அண்டி வாழ்பவன்.



# சரித்திர நாயகர்கள்

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை

சேவை, தொண்டு என்றால் அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் அநுமான். எந்தவிதப் பிரதிபலனையும் எதிர்பாராமல் தொண்டு புரிய வேண்டும். அப்படிச் செய்ததால்தான் அனுமனின் இதயத்தில் பகவான் ஸ்ரீராமபிரான் அமர்ந்தார்.

அபிஷேகப் ப்ரிய : சிவ :
அலங்காரப் ப்ரியோ விஷ்ணு
நமஸ்காரப் ப்ரியோ பானு : - என்பார்கள்.

சிவனுக்கு எப்போதும் அபிஷேகத்தில் பிரியம் அதிகம். அதுபோல் மஹாவிஷ்ணு அலங்காரப் பிரியர். சூரிய பகவானுக்கோ நமஸ்காரம் செய்தால் போதும், பூரண திருப்தியை அடைவார். இதேபோல ஹநுமத் ஸ்மரணாத் பவேத், ஸ்மரித்தால், நினைத்தால் போதும் : அனுமனின் அருளைப் பெற்று எல்லாச் செல்வங்களையும் பெறலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக உயிர் இருந்தால் தானே எல்லாச் செல்வங்களையும் அனுபவிக்க முடியும். அத்தகைய உயிரையும் கொடுத்துக் காப்பாற்றுவார் அனுமான்.

ராம ராவண யுத்தம் நடக்கிறது. அப்போது தேவேந்திரனையே வெற்றி கொண்ட ராவணனின் குமாரனான இந்திரஜித் பிரம்மாஸ்திரத்தைப் போட்டு வானர சைதன்யங்கள் எல்லாவற்றையும் மயக்கமடையச் செய்வான். ராமர், லட்சுமணர் உள்பட எல்லோரும் உயிர் அற்றவர் போல மயக்கநிலையை அடைந்தார்கள். அந்த அஸ்திரத்துக்கு கட்டுப்படாதவர் இருவர். அனுமன், விபீஷணன். இரவு வேளை, இரண்டுபேரும் கையில் தீவட்டியை ஏந்தியபடி யார் யார் எங்கெங்கே கிடக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்ட வந்தார்கள். ஓரிடத்தில் ஜாம்பவான் வயது முதிர்ந்த நிலையில் படுத்திருந்தார். அவர் பிரம்மாவின் புத்திரர். எனவே, அவரை அந்த அஸ்திரம் ஏதும் பாதிக்கவில்லை. அந்த இருட்டு வேளையில் அவருக்கு விபீஷணரை மட்டுமே பார்க்க முடிந்தது. அனுமன் பக்கத்திலிருப்பது அவருக்குப்

புலப்படவில்லை. அப்போது விபீஷணரைப் பார்த்து, அனுமார் உயிரோடு இருக்கிறாரா? என்று கேட்டார். விபீஷணருக்கோ ஒரே ஆச்சரியம். ராமர்-லட்சுமணர், சுக்ரீவன்-அங்கதன் போன்ற போர் வீரர்கள் பலர் இருக்கையில் அனுமனை மட்டும் குறிப்பாகக் கேட்கிறாரே என்று. உடனே அனுமன் ஜாம்பவானின் முன் சென்று அவரை வணங்கினார். விபீஷணனின் சந்தேகத்தைப் போக்கும் வகையில் ஜாம்பவான் கூறுகிறார்.

தஸ்மின் ஜீவதி வீரே து
ஹதமப்யஹதம் பலம்
ஹஹனுமதா யுஜ்ஜிதே ப்ரணே
ஜீவந்தோபி வயம் துஹா :

அனுமான் உயிர் பெற்றிருந்தால் போதும். மற்றவர் மடிந்து விட்டாலும் உயிர் பெற்று எழுந்துவிடலாம். அனுமார் உயிரை இழந்துவிட்டாலோ மற்றவர் உயிருடன் இருந்தாலும் மடிந்து போனது போலத்தான்.

நல்ல பேச்சுத்திறன் வேண்டும். அனுமாருக்கு அந்தத் திறமை அதிகம் உண்டு. அதனால்தான். சுக்ரீவனுக்கு ராமரின் நட்பு கிடைத்தது. இடத்துக்குத் தகுந்தாற்போல சமயத்திற்கேற்றார் போலப் பேச வேண்டும். சினிமாவில் வருவது போல நடிப்பாக இருக்கக் கூடாது. நிஜ வாழ்க்கைக்கு ஏற்றார்போல உண்மையாக இருக்க வேண்டும்.

ராமநாமம் ஒலிக்குமிடமெல்லாம் யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்-பணிவாக அடக்கமே உருவாக அமர்ந்து ராமரசத்தில் மதுர ரசத்தில் மூழ்கித் திளைத்திருப்பார். அந்த அடக்கம்தான் அவரை உச்சநிலைக்கு உயர்த்தியது. அவரை வழிபடுவதால்-நினைப்பதால் நமக்கும் அத்தனை நல்ல குணங்களும் கிட்டும். ராமாயணக் கதைகளும் பாரதக் கதைகளும் நமக்கு நல்ல புத்தியைப் புகட்டுகின்றன.

பாரதக் கதையிலிருந்து தீய ஆசைகளை நாம் கொள்ளக் கூடாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தீயவனான துரியோதனின் பக்கம் - கௌரவனின் பக்கத்தில் இருந்ததால் பீஷ்மர், துரோணர் போன்ற பெரியவர்களும் அழிந்துவிட்டனர். குரு பக்திக்கு ஏகலைவனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அர்ச்சுனனுக்கு நிகராக மற்றொரு வில் வீரன் இருக்கக் கூடாது என்னும் எண்ணத்தில் துரோணாசாரியார் கேட்டபோது தன் கட்டை



விரலையே காணிக்கையாகக் கொடுத்தான் அல்லவா. அவனது குரு பக்தியைப் பாராட்ட வேண்டும்.

வாலியும் சுக்ரீவனும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள்தாம். இருந்தாலும் அவர்களிடம் ஒற்றுமை இல்லை அவர்களை நாம் பின்பற்றக் கூடாது. சகோதரனாக இருந்தாலும் தீய வழியில் சென்றால் அவனை விட்டுவிட வேண்டும் என்பதற்கு விபீஷணன் விளங்குகிறான். நாம் ராம லட்சுமண பரத சத்ருக்னர் போல் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ராமாயணமும் பாரதமும் நமக்கு நல்ல அறிவுரைகளை வழங்குகின்றன.

ராஜ்யத்தைத் துறந்து காட்டுக்குச் செல்லும் ராமன் தாயை வணங்குகிறான். கோசலை அப்போது தர்மஸ் த்வாம் அபிரக்ஷது - நீ உறுதியுடன் கடைபிடிக்கும் தர்மம் உன்னைக் காப்பாற்றட்டும் என்று ஆசீர்வதிக்கிறாள். போருக்குப் புறப்படும் துரியோதனன் தாயை வணங்குகிறான். காந்தாரி அப்போது, யதோ தர்மஸ் ததோ ஜய : தர்மம் எங்கே இருக்கிறதோ அங்கே வெற்றி உண்டாகட்டும் என்றுதான் ஆசிகளை வழங்குகிறாள். தன் பிள்ளைக்கு வெற்றி கிட்டும் என்று அவள் நினைக்கக் கூட இல்லை. எனவே, அவன் போர்க்களத்தில் விழுந்து மடிகிறான்.

சரித்திர நாயகர்கள் (வரலாறு படைத்தவர்) அனைவருமே தியாகம் புரிந்தவர்கள். தன்னலம் அற்றவர்கள். அதுதான் நம் நாட்டுக்கு இப்போது தேவை.

ஜாம்பவான்தான் அனுமாருக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டி இமயமலையிலிருந்து சஞ்சீவி மூலிகையைக் கொண்டு வரச் சொன்னார். அங்கே சென்ற அனுமார் மூலியைத் தேடுவதில் நேரத்தை வீணடிக்காமல், சஞ்சீவி பர்வதத்தையே பெயர்த்துக் கொண்டு வந்து வானர சைதன்யங்களுக்கு மத்தியில் வைத்ததுதான் தாமதம், உடனேயே அந்த மூலிகைக் காற்றுபட்டு ராமர், லட்சுமணர் உள்பட அனைவரும் உயிர் பெற்று எழுந்தார்கள்.

அனுமாரை நினைத்த மாத்திரத்தில் - தியானம் செய்த உடனேயே புத்தி, பலம், கீர்த்தி, தைர்யம், பயம் இல்லாமை போன்ற நல்ல குணங்கள் நமக்கு உண்டாகின்றன.

அனுமாரோ மூலிகையைத் தேடுவதில் நேரத்தை வீணடிக்காமல் அந்தப் பர்வதத்தையே பெயர்த்துக் கொண்டு வந்தது

அவரது புத்திக் கூர்மையைக் காட்டுகிறது. குன்றினையே தூக்கிச் செல்லும் அளவிற்கு அவர் பலசாலியாகவும் இருந்தார். அதனால் அவருக்குக் கீர்த்தியும் உண்டாகிறது.

ஜாம்பவான் கூறிய உடனேயே அனுமாருக்கு இந்தக் காரியத்தைச் சாதிக்க முடியுமா என்ற தயக்கமே ஏற்படவில்லை. அத்தகைய துணிச்சல் இருந்ததால் அதில் வெற்றி கண்டார். அவர் பயம் என்றால் என்ன? என்று கேட்பார். அப்படி நிர்ப்பயம் உடையவர். இல்லாவிட்டால் தேவியை விடுவித்து உன் ஆவியைக் காத்துக் கொள் என்று ராமபிரான் விடுத்த அறிவுரையை ராவணனின் தர்பாரிலேயே அவனுக்கு எடுத்துக் கூற முடியுமா? ராவணன் அதைக்கேட்டு வெகுண்டு எழுகிறான். ஹனுமனை வதம் செய்யக் கட்டளையிடுகிறான். பின்னர் அதனை மாற்றிக் கொண்டு வாலில் தீயிடச் சொல்லுகிறான். அப்போது ஹனுமாருக்குப் பயமே தோன்றவில்லை. அந்தத் தீயைக் கொண்டே இலங்கையை எரிக்கிறார்.

ஹனுமாரைப் போன்றே, இன்று நம் நாட்டு மக்களுக்கு மனோபலம் வேண்டும். மன ஏவ மனுஷ்யாநாம் காரணம் பந்த மோக்ஷயோ என்பார்கள். நல்ல காரியங்களைச் செய்வதில் தைரியமும் தீய செயல்களைச் செய்வதில் பயமும் வேண்டும். இதைத்தான் பயபக்தி என்பார்கள் சான்றோர்.

பகவானிடத்தில் பயபக்தி இருந்தால் நமக்கு யாவும், நல்லதே நடக்கும். ஆரோக்கியம் தேவை. இதைத்தான் அரோகதா என்றார்கள். நன்றாகத் தூங்கிக்கொண்டு இருக்கக் கூடாது. உடலுக்குத் தூங்குவது தேவையானாலும் நாம் நம் கடமையில் தர்மத்தில் தூங்கிவிடக் கூடாது.



# சிவராத்திரி

**பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

அநேகமாக எல்லா சிவாலயங்களிலும் கர்ப்பக் க்ருஹத்தின் சுவரில் மேற்குப் பாகத்தில் லிங்கோத்பவ மூர்த்தியின் பிம்பம் இருக்கும். (சில கோயில்களில் மட்டும் இந்த இடத்தில் மஹாவிஷ்ணு இருக்கிறார்) லிங்கோத்பவ மூர்த்தி என்பது பரமேச்வரனுடைய அறுபத்தி நான்கு மூர்த்திகளுள் ஒன்று. விருஷபாரூடர், அர்த்தநாரீஸ்வரர், ஹரிஹரர், நடராஜர், காமாரி, பைரவர், தக்ஷிணாமூர்த்தி, ஸோமாஸ்கந்தர், பிக்ஷாடனர், ஊர்த்வதாண்டவர், ஜலந்தராஸுரஸம்ஹாரர், காலஸம்ஹாரர், இப்படி அறுபத்து நான்கு மூர்த்திகள் பரமசிவனுக்கு உண்டு. அவைகளுக்குள் ஒன்று லிங்கோத்பவ மூர்த்தி.

அந்த மூர்த்திதான் சிவாலயத்திலுள்ள லிங்கத்துக்குப் பின்புறம் காணப்படுவது. அதில், லிங்கத்துக்குள் ஒரு திவ்ய மூர்த்தியிருக்கும். அதன் ஜடா மகடம் லிங்க வட்டத்துக்குள் முடியாமலே இருக்கும். அதன் பாதமும் லிங்கத்தின் அடியில் முடிகிறவரைக்கும் தெரியாது. இந்த மூர்த்திக்குக் கீழே ஒரு வராஹமூர்த்தி இருக்கும் மேலே ஹம்ஸ ரூபத்தில் ஒரு மூர்த்தி இருக்கும்.

இந்த லிங்கோத்பவர் யார்?

ஸ்ரீ ருத்ராபிஷேகம் பண்ணுவதற்கு முன்பு ஒரு சுலோகம் சொல்லிவிட்டு, அப்புறம்தான் அபிஷேகம் பண்ணுவது வழக்கம். அந்த சுலோகம்

ஆபாதால-நப$^{4}$:ஸ்த$^{4}$லாந்த-புவன
ப்ரஹ்மாண்ட$^{3}$மாவிஸ்பு$^{2}$ரத்
ஜ்யோத்::-ஸ்பா$^{3}$டிக-லிங்க$^{3}$-மௌலி-விலஸத்
பூர்ணேந்து$^{3}$-வாந்தாம்ருதை:
அஸ்தோகாப்லுதம் ஏகம் அஜம் அனிசம்
ருத்$^{3}$ரானுவாகான் ஜபன்
த$^{4}$யாயேத் ஈப்ஸித ஸித்$^{3}$த$^{4}$யே(அ)த்$^{3}$ருதபத$^{3}$ம்
விப்ரோ(அ)பி$^{4}$ஷிஞ்சேத் சிவம்

இந்த ச்லோகத்தில் என்ன தெரியுமா சொல்லியிருக்கிறது? பாதாள ஆகாச பரியந்தம் எல்லையில்லாத ஜ்யோதி ஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்ற ஸ்படிக லிங்கத்துக்கு அபிஷேகம் பண்ண வேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

ஸ்படிக லிங்கத்துக்கு ஒரு வர்ணமும் சொல்ல முடியாது. எந்த வஸ்துவை அதில் வைக்கிறோமா அதனுடைய வர்ணத்தை அது ப்ரதிபலிக்கும். குணதோஷம் இல்லாதது அது. ஞானம் எப்படிப் பரிசுத்தமாக இருக்கிறதோ, அப்படி அந்த ஸப்டிக லிங்கம் இருக்கிறது. அதன்பின் பச்சை வில்வத்தை வைத்தால், லிங்கமே பச்சையாகத் தோன்றும். சிவப்பான அரளியை வைத்தால் சிவப்பாகத் தோன்றும். அது நிர்விகாரமானது. பரப்பிரஹ்ம ஸ்வரூபம் நிர்விகாரமாக இருந்தாலும், நம்முடைய மனோபாவத்தை எப்படி வைக்கிறோமோ அப்படித் தோன்றும் என்பதற்குத் த்ருஷ்டாந்தமாக. இந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அதற்குப் பின்னால் உள்ள வஸ்துவுக்கு அது எதையும் மறைக்காது. அதற்குப் பின்னால் உள்ள வஸ்துவுக்கு அது த்ருஷ்டாந்தம். நினைக்கிற ரூபமாக அது தெரியும்.

மேலே சொன்ன ச்லோகப்படி, அதன் சிரஸில் பூரண சந்திரன் இருக்கிறது. பூர்ணேந்து என்று ச்லோகத்தில் வருவது. பூர்ண இந்து. இந்து என்றாலும் சந்திரன் என்றாலும் ஒன்றுதான். ஈச்வரன் ஜடையும், கங்கையும் கண், காது, மூக்கு, கை, கால் முதலிய அவயவங்களும் கொண்ட ஸகல ரூபத்தில் வருகிறபோது, அவர் மூன்றாம் பிறையை வைத்துக்கொண்டு சந்திர மௌலியாக இருக்கிறார். ரூபமே இல்லாத ப்ரமாத்மா நிஷ்கள தத்வமாயிருக்கிறபோது, அங்கே சந்திரன், கங்கை எதுவும் இல்லை. அரூபமாயும் இல்லாமல், ஸ்வரூபமாயும் அவயவங்களோடு இல்லாமல், லிங்கமாக ஸகள-நிஷ்களமாக இருக்கிறபோது அவர் பூர்ண சந்திரனை உச்சியில் வைத்திருக்கிறார். அதிலிருந்து அமிருதமே கங்கை மாதிரி கொட்டுகிறது.

யோகிகள் தமது சிரசுக்குள் ஸஹஸ்ரார கமலத்தில் உள்ள சந்திர மண்டலத்தில், ஜ்யோதி ஸ்வரூபத்தை த்யானம் பண்ணுவார்கள். அந்தச் சந்திர பிம்பத்திலிருந்து அம்ருதம் ஒழுகும். அதனால் அவர்களுக்குப் பரமானந்தம் உண்டாகிறது. ஸமஸ்த ப்ரபஞ்ச ஸ்வரூபமான ஜ்யோதிர் லிங்கம் குளிர்ந்தால், லோகமெல்லாம் குளிரும். இதனால்தான் சிவலிங்கத்துக்கு வியாமல் அபிஷேகம் செய்வது. ருத்ர அபிஷேகம் செய்வது. ருத்ர

அபிஷேகத்திற்கு முன்பு சொல்லும் ச்லோகம். இதை எல்லாம் அறிவுறுத்துகிறது.

ஸகல பிரஹ்மாண்டமும் சிவலிங்கம் தான். ஸ்ரீருத்ரத்தில் இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வ பதார்த்தங்களும், நல்லது கெட்டது எல்லாம் சிவ ஸ்வரூபம் என்று ஸ்ரீருத்ரம் சொல்லுகிறது.

லிங்கம் ஏன் வட்ட வடிவமாயிருக்கிறது? வட்டமான ஸ்வரூபத்துக்குத்தான் அடிமுடியில்லை! ஆதியில்லை. அந்தமுமில்லை. மற்றவைகளுக்கு உண்டு. முக்கோணத்துக்கும் சதுரத்துக்கும் உண்டு. ஆதியந்தம் இல்லாத வஸ்து சிவம் என்பதை லிங்காகாரம் காட்டுகிறது.

சரியான வட்டமாக (Circle) இல்லாமல் லிங்கம் நீள்வட்டமாக (elipse) இருக்கிறது. பிரபஞ்சமே எலிப்ஸ்டிக்காகத்தான் இருக்கிறது. நம் ஸூர்ய மண்டலத்தை (Solar System) எடுத்துக் கொண்டாலும் க்ரஹங்களின் அயனம் நீளவட்டமாகத்தான் இருக்கிறது என்று நவீன விஞ்ஞானத்தில் சொல்வதும், பிரஹ்மாண்டமும், ஆவிஸ்புரத் என்று சாஸ்த்ரம் சொல்லும் லிங்க ரூபத்துக்கு ரொம்ப ஒற்றுமையாக இருக்கிறது.

யாராவது பந்துவை நினைக்கிறோம். ஸந்தோஷமாயிருக்கிறது. ஆனால் அவருடைய உருவத்தையும் பார்த்தால் ஸந்தோஷம் பூரணமாகிறது. அவ்வாறே உருவற்ற சிவமும் ஒரு உருவத்தோடு வந்து அனுக்ரஹம் பண்ணினால்தான் ரொம்ப ஸந்தோஷமாக இருக்கும். ஞானிகளுக்கு மட்டுமே பரமாத்ம ஸ்வரூபத்தின் நிராகார (அருவ) உண்மை புரியும். உருவத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அனுபவிக்கிற நமக்கு உருவத்தோடு கண்டால்தான் ஆனந்தம் உண்டாகும். அதற்காகத்தான் உருவமற்ற பரமேச்வரன். அருவுருவமான லிங்கமானதோடு நில்லாமல், அந்த லிங்கத்துக்குள்ளேயே திவ்யரூபம் காட்டும் லிங்கோத்பவ மூர்த்தியாக இருக்கிறார். இப்படி ரூபத்தைக் காட்டினாலும் வாஸ்தவத்தில் அவருக்கு அடியும் இல்லை. முடியும் இல்லை. அதாவது ஆதியும், அந்தமும் அற்ற ஆனந்த வஸ்துவே தாம் என்று உணர்த்துவதற்காக, மேலே லிங்க வட்டத்துக்கள் ஜடாமுடி முடியாமலும், கீழே அதேமாதிரித் தம் பாதம் அதற்குள் அடங்காமலும் இருப்பதாகக் காட்டுகிறார்.

அடிமுடி எல்லை இல்லாமல் அவர் ஜ்யோதி ஸ்வரூபமாக நின்றார். ஜ்யோதிர்லிங்கமாக, ஆகாயத்துக்கும் பூமிக்குமாகப் பரமசிவன் உத்பவித்த இரவே சிவராத்ரியாகும்.

அப்படி ஜ்யோதி ஸ்வரூபமாகப் பரமேச்வரன் நின்றபொழுது, விஷ்ணு அவரது பாதத்தைப் பார்க்கப் பாதாளத்துக்குப் போனார். பூமியைக் கல்லும் ஸ்வாபவம் வராஹத்துக்கு உண்டு. எனவே, அந்த ரூபத்தை எடுத்துக் கொண்டார். பிரஹ்மா ஹம்ஸ ஸ்வரூபமானர். பக்ஷிக்குப் பறப்பது ஸ்வபாவம். பக்ஷியாகப் பறந்து ஜோதிர்லிங்கத்தின் முடி தேடிப் போனார். இரண்டு பேருக்கும் தேடிப் போனவை அகப்படவில்லை. ஹம்ஸம் வந்தது. நான் கண்டு விட்டேன் என்று பொய் சொல்லியது. அதனால்தான் ப்ரஹ்மாவுக்குப் பிரத்யேகமாகப் பூஜை இல்லாமற் போய்விட்டது. பரிவாரமாக மட்டும் வைத்துப் பூஜை செய்வதுண்டு. புராண ஐதிஹ்யத்தில் இப்படி இருக்கிறது.

ப்ரஹ்மா ஹம்ஸருபமாகப் போய்ப் பார்த்தும் சிவபெருமானின் சிரஸ் அகப்படவில்லை என்றும், விஷ்ணு வராஹ ரூபமாகப் போய்ப்பார்த்தும் பாதம் அகப்படவில்லை என்றும் சொல்வதன் தாத்பர்யம் என்னவென்றால், பரமாத்மா ஆதி அந்த க்ஷீனமான வஸ்து என்பதுதான். ஸ்ருஷ்டி, பரிபாலனம் எல்லாவற்றையும் கடந்த வஸ்து அது என்பதுதான். இப்படி அடிமுடி தேடி ப்ரஹ்மாவும் விஷ்ணுவும் பெறமுடியாதவரையே, என் ஸாமர்த்தியத்தால் அறிய முடியும் என்கிற அஹங்காரமில்லாமல், அன்போடு பக்தி செய்து உருகினால், வெகு சுலபத்தில் அவர் நமக்கு அகப்பட்டு விடுவார். அன்பினாலே மிகமிக விரைவில் திருப்தி பெற்று அனுக்ரஹிப்பவர் சிவபெருமான் என்பதாலேயே அவருக்கு ஆசுதோஷி என்று ஒரு பெயர் இருக்கிறது. ஆஷுடோஷ் முகர்ஜி என்று ஓர் சீர்திருத்த (reformist) முக்கியஸ்தரைச் சொல்வார்கள். ஆசுதோஷிதான் ஆஷுடோஷ் என்றாயிற்று. ஆசுகவி என்றால் கேட்டவுடனே கவிபாடுகிறவர் அல்லவா? இப்படியே ஸ்மரித்த மாத்திரத்தில் சந்தோஷித்து அனுக்கிரஹம் பண்ணுகிற வள்ளல்தான் ஆசுஷோஷி.

சகல ப்ரபஞ்சமும் அடங்கியிருக்கிற லிங்க ரூபமானது ஆவிர்பவித்த சிவராத்ரி மகா சதுர்த்தசி இரவில், அவரை அப்படியே ஸ்மரித்து ஸ்மரித்து அவருக்குள் நாம் அடங்கியிருக்க வேண்டும். அதைவிட ஆனந்தம் வேறில்லை.

# தன் கையே தனக்குதவி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்யார்
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை

இன்றைக்கு 1976ல் ஒரே விஷயமாக இரண்டு தினுசான அபிப்பிராயங்கள் என்னிடம் வந்தன. ஒன்று எனக்கு ஸ்தோத்ரம்; இன்னொன்று வசவு. கௌரவமாக, நாசூக்காக வைதார்கள். வைதார்கள் என்று நான் குற்றம் சொல்லவில்லை. அவர்கள் வைத்ததில் எனக்குப் புத்திமதி இருப்பதாகவே தெரிந்து கொள்கிறேன்.

ஸ்தோத்ரத்தை விட வசவுதான் எப்போதுமே ஒருத்தனுக்கு நல்லது செய்வது. ஸ்தோத்ரம் கர்வத்தில் கொண்டுவிட்டு ஆத்ம ஹானிக்குத்தான் வழி செய்கிறது. ஒருத்தர் வைகிற போதுதான் நமக்கு நம் தப்பு தெரிய இடமேற்படுகிறது. அதனால் அதைத் திருத்திக் கொண்டு ஆத்மாவைச் சுத்தி செய்து கொள்ள வழி உண்டாகிறது. ஆகையால் நமக்கு நல்லது செய்வது யார் என்றால் நம்மை ஸ்தோத்ரம் செய்கிறவனில்லை; நாம் செய்கிற தப்பைச் சொல்கிறவன்தான். சொல்கிறதுண்டு; சிரிக்க சிரிக்கச் சொல்கிறவர் மற்றபேர்; அழ அழச் சொல்கிறவர் உற்றபேர்.

ஒரே விஷயமாக இப்படி இரண்டு வித உபசாரங்களுக்கு நான் கர்வப்படும்படி ஸ்தோத்ர உபசாரமும், எனக்குப் புத்தி வரும்படிக் கண்டன மஹா உபசாரமும் கிடைத்தன.

எப்பொழுதெப்பொழுதோ, எங்கெங்கேயோ நான் ஸோஷல் சர்வீஸ் பற்றிச் சொன்னதை இப்போது போட்டுக் கொண்டிருக்கிறார் களோல்லியோ? அதை இப்போது நான் தான் புதுசாக எழுதுகிறானேக்கும் என்று நினைத்துக் கொண்டுதான் ஒருத்தர் வந்து அதற்காக என்னை ஸ்தோத்ரம் பண்ணி விட்டுப் போனார்.

அதனால் எனக்குக் கர்வம் வந்துவிடக் போகிறதே என்று அம்பாளே அனுப்பி வைத்த மாதிரி, தம்பதியாக இரண்டு பேர் வந்து இதைப் பற்றியே வேறே தினுசான அபிப்பிராயம் சொல்லிவிட்டுப் போனார்கள். அவர்களில் அகமுடையான் கொஞ்சம் எடுத்துக் கொடுத்தவுடன் பெண்டாட்டியும் சேர்ந்து கொண்டு விட்டாள்.

வசவு வசவு என்று நான் சொன்னாலும் அவர்கள் தாபத்தை ரொம்ப அடக்கிக் கொண்டு, வார்த்தையில் கொஞ்சம் கூடப் பதட்டமில்லாமல், மரியாதைக்குறைவாக ஒரு சொல்கூடச் சொல்லாமல்தான் பேசினார்கள். கோபப்பட வேண்டிய இடத்தில் துக்கப்பட்டுக் கொண்டே சொன்னார்கள். ஆனாலும், அதை வசவு என்று வைத்துக் கொண்டால்தான் எனக்கு ரோஷம் வந்து கொஞ்சம் ஆக என்னை நாமே அலசிப் பார்த்துக் கொள்வேன் என்று தோன்றியதால், வசவு வசவு என்று சொல்கிறேன்.

**பொதுத் தொண்டும், குடும்பப் பணியும்**

சமூக சேவை பற்றி நான் சொன்னதில் அவர்களுக்கு என்ன ஆட்சேபம்? சமூக சேவை என்பதை மிகையாக அழுத்தங் கொடுத்து சொன்னால்தான் அவனவன் தனக்கு செய்து கொள்ள வேண்டிய சுய சேவை, குடும்பத்துக்கான பணி ஆகியவையெல்லாம் கெட்டுப் போகும்படியாகச் செய்திருக்கிறேன் என்றுதான் ஆட்சேபம். அவர்கள் ஆட்சேபம் என்று சொல்லிச் சண்டை போடாமல் அழுதுவிட்டுத்தான் போனார்கள் என்றாலும் இதுதான் அதற்கு அர்த்தம்.

நான் எப்பொழுது எதைச் சொன்னேனோ? (பத்திரிகைகாரர்கள்) இப்பொழுது அதில் எதைப் போடுகிறார்களோ? அவனவன் தனக்குத்தானே செய்து கொள்ள வேண்டிய காரியங்களையும் தன் வீட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் விட்டுவிட்டுப் பரோபகராம் என்று போக வேண்டும் என்று நான் நினைத்ததேயில்லை. அப்படி நான் அறிவுரை வழங்கவும் மாட்டேன். ஆனாலும் உபயன்யாசம் என்ற செய்கிறபோது இதைப்பற்றிய விசேஷமாகச் சொல்லாமல் இருந்திருக்கிறேன் போலிருக்கிறது. தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் ஒருவன் செய்து கொள்வது சொந்தமாக ஏற்பட்ட ஸ்வபாவமான சமாசாரம். இதைப் பற்றி வெளி மனிதர்கள் விசேஷமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதில்லை. சமூகம் முழுவதற்கும் நல்லதற்கானதைச் சொல்லவும், அதற்காகத் திட்டங்களைப் போட்டுக் காரியங்களைச் செய்யவும்தான் நாங்கள் (ஆசார்ய பீடங்கள்) ஏற்பட்டிருக்கிறோம் அதனால் சமூக சேவையை அழுத்தமாக சொல்லியிருப்பேன்.

இதனால் தனி நபர், குடும்பம் இவைகளை நாங்கள் இரண்டாம் பக்ஷமாய் வைத்துவிட்டோம் என்று அர்த்தமே இல்லை.



நான் திரும்பத் திரும்ப சொல்லியிருக்கிறேன். இந்து மதம் தனி நபரை சுத்தி செய்கிறதற்குத் தான் முதல் இடம் கொடுக்கிறது. மற்ற மதங்கள் மாதிரி அதில் சமூக உணர்வு இல்லை என்று. அந்த மற்றவர்கள் கண்டனம் செய்கிறபோது, நாமும் இப்படி ஒரு மதம் இருந்தால் அது உசந்ததில்லைதான் என்று தப்பாக நினைத்துக் கொண்டு அவர்களிடம் அதெல்லாமில்லை. எங்கள் மதத்தில் பரோபாகரத்தைப் பற்றி எவ்வளவு இருக்கிறது பாருங்கள். அதுதான் எங்களுக்கு முக்கியம் என்று சமூகத்தைவிட நம் மதத்துக்கு தனிமைதான் முக்கியம். அவனவனும் தனது ஆசார அனுஷ்டானத்தால் அவனவனைச் சுத்தி செய்து கொள்வது தான் நம் மதத்துக்கே உயிர்நிலை என்பது என் அபிப்ராயம். தனிமையின் ஸ்வய அனுஷ்டான பலத்தினாலும், அவர்களின் பரிசுத்தியின் சக்தியினாலும்தான் இந்து மதம், மற்ற எந்த மதமும் தோன்றுவதற்கும் முன்னாலிருந்து பதினாயிரம், லக்ஷம் வருஷங்களாக அந்த எல்லா மதங்களும் இதன்மேல் படையெடுத்த வந்ததையும் கரைபுரண்டு வந்ததும் கூட சமாளித்து ஜீவனோடு இருக்கிறது என்பதே என் அபிப்ராயம்.

இந்துக்களின் மதத்துக்கு உயிர்நிலை தனி மனிதனின் ஸ்வதர்மப்படியான சுத்த வாழ்க்கை. கிறிஸ்தவர்கள் மதத்துக்கு உயிர் நிலை பரோபகாரம்; துருக்கர்கள் மதத்துக்கு உயிர்நிலை கட்டுப்பாடு என்பது என் அபிப்பிராயம். பொதுவில் இந்து மதம் தவிர மற்ற எல்லா மதத்தினருமே மிகவும் ஒருங்கிணைந்து இருப்பார்கள். நமக்கு ஒருங்கிணைப்பு போதாது. இங்கே தனி மனித சக்தியாலேயே மதம் ஜீவிக்கிறது.

**மற்ற மதங்களுடன் வித்தியாசம்**

சங்கம் சரணம் கச்சாமி என்பதாகப் புத்தர் பல பேர் சேர்ந்து ஒருங்கிணைத்து மதத்தைக் காப்பாற்றும்படி செய்தார். கிறிஸ்துவத்திலும் திருப்பலி, கூட்டுப்பலி என்று எல்லோரும் சேர்ந்துதான் செய்கிறார்கள். மசூதியிலும் இப்படித்தான். இசுலாமியர்களுக்குள் இருக்கிற ஒருங்கிணைப்பு கட்டுப்பாடு சொல்லி முடியாது. ஸீக்குகள், பார்ஸீக்கள், மாதிரி எண்ணிக்கையிலேயே குறைச்சலாயிருக்கிறவர்களைப் பார்த்தாலோ அங்கேதான் எண்ணிக்கைக்கு எதிராக ஒருங்கிணைப்பு. கட்டுப்பாடு இன்னும் அதிகமாயிருக்கிறது. தங்களது சின்ன சமூகம் சிறிதவிடக்கூடாது என்பதாலேயே

அவர்கள் சமய ரீதியில் சமூகம் முழுவதும் பிரியாமல் ஒட்டிக் கொண்டிருக்கும்படி வைத்து நடத்துகிறார்கள்.

இந்து மதம் தவிர மற்றவை எல்லாமே சமூக அடிப்படை என்கிறபடிதான் அவற்றின் மத வழிபாடு அமைந்திருக்கிறது. தனியாக அவனவனும் தியானிப்பது என்பது எந்த மதத்திலும் இல்லாமலில்லை. புத்த மதத்தில் குறிப்பாக இது விசேஷ ஸ்தானம் பெற்றுதான் இருக்கிறது. ஆனாலும் கூட கூட்டுப்பூஜை தவிர வீட்டுப் பூஜை என்று மற்ற மதங்களில் இல்லை. எல்லோரும் சேர்ந்து கூட்டு வழிபாடு. வர்ண ஆசிரமங்களால் ஏற்படும் தனித்தனி அனுஷ்டானமில்லாமல் எல்லோருக்கும் ஒரே விதமான அனுஷ்டானங்கள் என்பவைதான் மற்ற மதங்களில் முக்கியமாக இருக்கின்றன.

மற்றவர்கள், தேவாலயத்தில், மசூதியில், குருத்வாராவில் கூட்டு வழிபாடு செய்கிறார்களென்றால் நாமும்தானே கோவிலில் சேர்ந்து உத்ஸவாதிகள் செய்கிறோம்? என்று கேட்கலாம். வாத்ஸவம்தான். ஆனால் அவர்கள் திருப்பலி தொழுகை செய்வது போலக் கோயில்களில் நாம் கூட்டுப் பிரார்த்தனை ஒன்றும் செய்வதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். கோயில்கள் தான் நம் வேத பாரம்பரியத்துக்கே (முதுகெலும்பு) ஆக இந்த நாகரிகத்தைக் காப்பாற்றிக் கொடுத்துக் கொண்டிருக்கிற தென்றாலும், கோயில் மூலமாக நமக்குக் கிடைக்கிற ஈஸ்வரப் பிரசாதத்தை தனிநபர் அனுஷ்டானத்தின் மூலமாக அடைகிறோம்.

---